விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 319 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 17 வியாழக்கிழமை (03.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பாண் விலையில் மாற்றமில்லை

### யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

பாண் விலையில் மாற்றமில்லை என யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தால் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரி 11

## ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளை பயன்படுத்த அரசு இடமளிக்க வேண்டும்

### இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளை பயன்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இடமளிக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பதிவில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஜனநாயகத்திற்கு அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரஜைகளின் உரிமைகளிற்கு ஆதரவளிப்பதற்கான தளத்தினை உறுதி செய்யுமாறு நாங்கள் இலங்கை 11

### அரசின் அடக்குமுறைக்கு எதிராக

# கொழும்பில் மாபெரும் எழுச்சிப் பேரணி

### பெருமளவானோர் பங்கேற்பு



(கொழும்பு)

ரணில் அரசின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் நேற்று மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (11ஆம் பக்கம் பார்க்க)

## பேரணியின் பாதியிலேயே வெளியேறிய சஜித்

(கொழும்பு)

அரசுக்கு எதிரான எதிர்ப்புப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் பாதியிலேயே வெளியேறினார். இதனால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அரசுக்கு எதிராக வெகுஜனப் போராட்டம் நேற்று மருதானை ரெக்னிக்கல் சந்தியில் இருந்து ஆரம்பித்தது. எனினும், கோட்டை ரயில் நிலையத்தை போராட்டக்காரர்கள் நெருங்காத வகையில் 11

### கரணவாயில் காணாமல்போனவர்

## கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கில் காணாமல் போன குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லத்துரை என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். 11

### பயங்கரவாதத்தை அரங்கேற்றும்

## அரசாங்கத்தை கண்டு அஞ்சப்போவதில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அரச பயங்கரவாதத்தை அரங்கேற்றும் அரசாங்கத்துக்கு ஒருபோதும் நாம் அஞ்சப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரச அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரி 12

## வலி. வடக்கில் பொதுமக்களின் காணி அபகரிப்புக்கு எதிராக

### தெல்லிப்பழையில் மாபெரும் போராட்டம்




03 ஆம் பக்கம் பார்க்க

## அமைதியாக ஒன்றுகூடுவதற்கு அனுமதி பெறவேண்டியதில்லை

### அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் உள்ளிட்ட தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கு போராட்டக்காரர்கள் அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் என்பது ஓர் உரிமையேயன்றி, அதுவோர் சலுகையல்ல. எனவே அந்த உரிமைக்கு இடமளிக்கவேண்டிய கடப்பாடு அதிகாரிகளுக்கு இருக்கின்றது என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டுமக்கள்மீது அரசாங்கத்தினால் 11

### பருவ மழை நிறைவடைந்ததும்

## வடக்கு காணிகளை விடுவிக்க தீர்மானம்

### ஜனாதிபதி உறுதியளித்ததாக அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பருவ மழைக் காலம் நிறைவடைந்ததும் சாதகமான தீர்க்கமான முடிவெடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்துங்கள்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நாட்டின் அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகளை உற்று நோக்கும்போது நாட்டு மக்களை அசௌகரியத்தில் ஆழ்த்தும் அநீதியான சந்தை உருவாகியிருப்பது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக அண்மைக்காலங்களில் சீனி, கோதுமை, பருப்பு போன்ற உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை விலை குறைவடைந்திருந்த போதிலும், அதற்கு நிகரான சந்தை விலை காணப்படாமையினால் சாதாரண நுகர்வோருக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அரசாங்கத்தின் கடமை என்று நாம் கருதுவதினால் இதற்கான உகந்த நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

திறந்த பொருளாதார சந்தை முறையில் விலைக் கட்டுப்பாடு போன்ற நடைமுறைச் சாத்தியமில்லாத அணுகுமுறைகளுக்கு பதிலாக அத்தியாவசியப் பொருட்களின் விலையை ஒழுங்குபடுத்தும் முறையை நாட்டுக்கு அறிமுகம் செய்து வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

1980இல் திறந்த பொருளாதாரத்தையும் உள்நாட்டு சீனி உற்பத்தியாளர்களையும் பாதுகாத்துக் கொண்டு சீனியின் சந்தை விலையை நியாயமான முறையில் பேணுவதற்கு சீனி உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் திறைசேரிக்கும் இடையில் நடைமுறைப் படுத்திய நடைமுறையை தற்போது பயன்படுத்தலாம் என்பது எமது நம்பிக்கையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று புதன்கிழமை சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

துப்புரவு செய்யப்பட்ட துயிலும் இல்லத்தில் மீட்கப்பட்ட சிதைவுகளுக்கு முன்பாக சுடரேற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விமான சேவையை மீண்டும் தொடங்கும் இரண்டு நாடுகள்

(கொழும்பு)

ரஷ்ய மற்றும்பிரான்ஸ்விமான சேவைகள் இலங்கைக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் முக்கிய விமானச் சேவைகளில் ஒன்றான 'அஸூர் எயார்' இன்று முதல் விமான சேவையைத் தொடங்கும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு பிரான்ஸ் நாட்டின் தேசிய விமான நிறுவனமான 'எயார் பிரான்ஸ்' நாளை முதல் விமான சேவையைத் தொடங்கும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விமானங்கள் வாரந் தோறும்சேவையில்ஈடுபடும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)


வேலை ஆட்கள் தேவை

சலூன் முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் யாழ். நகரை அண்மித்தவர் விரும்பத்தக்கது.

(13329)

076 764 6670



King Star Travels & Tours



வெளிநாட்டு வேலைவாய்ப்பு

- Dubai
- Doha
- Bahrain

ஆகிய நாடுகளிற்கான வீசாக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

(13330)

076 904 6777
076 943 6777



31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 05.10.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது தந்தையார்

அமரர் சரவணமுத்து நவராசசிங்கம் (நவராசா, நவரை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 02.11.2022 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. நாளை வெள்ளிக் கிழமை (04.11.2022) முற்பகல் 11 மணியளவில் இல.61, புதுறோட், கரவெட்டி மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

எமது தந்தையார் இறைபதமடைந்தது முதல் இற்றைவரை உடனிருந்து ஆறுதல் கூறி தன்னலம் பாராது உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி, முகப்புத்தகம், பதாகைகள், கண்ணீர் அஞ்சலி, மாலை அணிவித்தும், மலர்வளையம் வைத்தும் மற்றும் பிற வழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்குகொண்ட அனைத்துள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தந்தையாரின் இறுதி நிகழ்வின்போது நாம் உணர்வுகளுக்கு அடிமையாகவிருந்த தருணத்தில் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நாம் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பைத் தரத்தவறியிருப்பின் அதனை மன்னித்து பெருமனதோடு இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.61, புதுறோட், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்
074 383 2383

(C-5202)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வளவாளர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக வருடந்தோறும் கலை,மொழி சார்ந்த வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

இதற்கு அமைவாக தென்மராட்சிப் பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2023 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், நாடகம் , ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய வகுப்புக்களை தொடர்ந்து நடத்தவுள்ளது.

அதற்கான வளவாளர்களை நியமிப்பதற்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்கள், தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியன அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 16.11.2022 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் - தென்மராட்சி, குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.மேலதிக தகவல்களுக்கு 0776 696 019 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (4)

---

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநெறிகளைக் கற்பிப்பதற்கு பகுதி நேரமாக சித்திரம், நடனம், சங்கீதம், மிருதங்கம், வயலின், நாடகம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள தகுதியுடையவர்கள் தங்களது சுய விபரக் கோவையினை 14.11.2022 இற்கு முன்னர் " நிலையப் பொறுப்பதிகாரி , கலாசார மத்திய நிலையம், ஐயனார் கோவிலடி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு 0718 787 644 எனும் இலக்கத்துடன்தொடர்பு கொள்ளவும். (4)

# புத்தூர் பொதுநூலகத்தின் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி ஒன்று நாளை முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாக நடைபெறும் இக் கண் காட்சியில் பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள், பொதுமக் கள் அனைவரும் கலந்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (4)

# அடைமழை காரணமாக ஆபத்தில் நெற்செய்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்த கனமழையின் காரணமாக தென்மராட்சி பகுதிக்குட்பட்ட மட்டுவில் கிராம நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மழை வீழ்ச்சி தொடருமிடத்து நெற்பயிர்ச் செய்கை அழியும் என விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர். (4-104)

# வலி.வடக்கில் காணி அபகரிப்பு; தெல்லிப்பழையில் போராட்டம்

(அராலி)

**வலி. வடக்கில் காணி அபகரிப்பு போராட்டத்திற்கு எதிராக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று தெல்லிப்பழை சந்தியில் இருந்து ஆரம்பித்து தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் முடிவுற்றது.**



தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் அபகரித்துள்ள நிலையில் அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்னால் வீதியில் அமர்ந்திருந்து வீதிமறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். பின்னர் பிரதேச செயலக வளாகத்தினுள் நுழைந்து முற்றுகை போராட்டம் செய்தனர்.

போராட்டத்தின் முடிவில் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-33-104)

# விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகளுக்கு சலுகைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(உ.தர)ப் பரீட்சை-2022 மற்றும் பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சை-2022 ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சையின் போது முகங்கொடுக்கும் பாதகமான நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளது.

அன்றைய தினம் இவ் வேலைத் திட்டத்தை சிறப்பாக மேற்கொள்வதற்காக தங்களது வலயக் கல்வி அலுவலகத்தில் விசேட கல்விப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் எம். ஜீவராணி புனிதா அறிவித்துள்ளார். (4)

# தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவு

(அராலி)

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 149.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது

கடந்த 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை வரையான 24 மணிநேரத்தில் யாழ். மாவட்டத்தில் தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 149.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் அச்சுவேலியில் 145.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ். நகரப் பகுதியில் 138.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ். கோட்டையில் 126.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் சாவகச்சேரியில் 123.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் திருநெல்வேலியில் 117.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நெடுந்தீவில் 93.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நயினாதீவில் 70.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் வடமராட்சி அம்பனில் 59.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பருத்தித்துறையில் 30.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகி உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-104)

## இளவாலை மெய்கண்டான் ம.வி

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மெய்யொளி மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில் 1922 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் (விளையாட்டு, ஏனைய போட்டிகள்) மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என்பவற்றில் சாதனை படைத்த மாணவன்/ மாணவி (தனிநபர்), குழு போன்ற விபரங்கள் (அவர்களது பெயர், படங்கள்) யாரிடமாவது கைவசம் இருந்தால் அவற்றினையும் மலரிற்கான கட்டுரைகள் அல்லது வேறு ஆக்கங்கள் என்பவற்றையும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர் அலுவலகத்தில் ஒப்படைத்து நூற்றாண்டு விழா மலரை பிரசுரிப்பதற்கான பங்களிப்பை வழங்குமாறு பாடசாலை அதிபர் ஆர். கணேசநாதன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்திடம் போராடி வீழ்ந்தது நியூஸிலாந்து




இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-12 குழு-01 இல் நடைபெற்ற தொடரின் 33 ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பிரிஸ்பேன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் இங்கிலாந்து அணியும் நியூஸிலாந்து அணியும் மோதின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஜோஸ் பட்லர் 73 ஓட்டங்களையும் அலெக்ஸ் ஹேல்ஸ் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 180 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இங்கிலாந்து அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக க்ளேன் பிலிப்ஸ் 62 ஓட்டங்களையும் கேன் வில்லியம்சன் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (4)

## 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில்

# நெதர்லாந்து அணி வெற்றி



இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் 34 ஆவது போட்டியில் நெதர்லாந்து அணி சிம்பாவே அணியை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

அடிலைய்ட் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 19.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


இதனை அடுத்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 18 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

அவ்வணி சார்பாக மேக்ஸ் ஓடவுட் 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இந்த வெற்றியின் மூலம் குழு 2 இல் ஏற்கனவே வெளியேறியுள்ள நெதர்லாந்து அணி 2 புள்ளிகளை பெற்றுள்ளது. (4)




கிருசாந்

எல்லோருக்கும் வணக்கம்
இதை காலைல படிச்சா காலை வணக்கம்
மதியத்தில படிச்சா மதிய வணக்கம்
இரவில படிச்சா இரவு வணக்கம்



நீங்க எப்ப இதை பார்க்கிறீங்களோ
அதற்கு ஏத்த மாதிரி மாத்திக்கோங்க

கீர்த்தனா



எல்லாம் சரியா
இருக்கா சார்?
ம்ம் சரியா இருக்கு
வண்டி எங்கே?
அது வீட்ல
இருக்கு சார்.
எல்லாம் சரியா
இருக்குதுன்னு
சொன்னாத்தான்
வண்டிய வீட்ல இருந்து
எடுத்துட்டு வருவேன்

பாலா

வாழ்வின் இசை என்பதே
பெண்களின் சிரிப்பில் தான்
புதைந்து கிடக்கிறது.
பெண்கள் மகிழ்ச்சியோடு
இருப்பதில்தான் ஒட்டுமொத்த
குடும்பத்தின் மகிழ்ச்சியே
அடங்கியிருக்கிறது.- தாகூர்-




நீரஜா

படிக்கும் போது தூக்கம் வந்தா என்ன பண்ணனும்



நமக்குப் படிப்புத்தான் வரல தூக்கமாவது
வருதேன்னு தூங்கிடனும் சார்

கார்மீகன்



என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று
யோசித்துக் கொண்டிருப்பதை விட
முயற்சித்துப் பார். கிடைத்தால் வெற்றி
இல்லாவிட்டால் அனுபவம் இரண்டுமே
வாழ்க்கைக்குத் தேவைதான்.

சுலோயன்

மேலதிக நேரம் எடுக்கும் போது
எப்பொழுதும் நித்திரையிலிருந்து
நேரத்தை எடுக்காதீங்க
பொழுதுபோக்கு நேரத்திலிருந்து
களவெடுங்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைக் காலத்தின் பின்னும்

# சிறைவாசம் அனுபவித்த தமிழ் அரசியல் கைதிகள்

## இழப்பீடு வழங்குமாறு தேசிய சமாதான பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

**ஜனாதிபதியினால் அண்மையில் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சிலர் தமது தண்டனை காலத்துக்கு மேலாக பல வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று தேசிய சமாதான பேரவை வலியுறுத்தியுள்ளது.**

ஜனாதிபதிக்குரிய பொது ம்ன்னிப்பு அதிகாரத்தை பயன் படுத்தி, அரசியல் கைதிகள் 8 பேர் விடுதலை செய்யப்பட்ட னர். அவர்களில் மூன்று பேர், முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கவை படு கொலை செய்ய முயன்ற குற்ற ச்சாட்டின் பேரில் தண்டனை அனுபவித்து வந்தவர்களா வர்.

விடுவிக்கப்பட்ட எட்டு கைதி களில் நால்வர் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை விட நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்று ஜனாதிபதி செயலகம் அதிர்ச்சியளிக்கும் வகையில் ஒப்புக்கொண்டுள்ளதாக தேசிய சமாதான பேரவை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள் ளது.

விடுவிக்கப்பட்டவர்களில் மூன்று கைதிகளுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் 22 ஆண்டுகள் சிறை த்தண்டனையை பெற்றிருந்த னர்.

எனினும், மற்றுமொரு கைதிக்கு நீதிமன்றினால் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் 14 ஆண்டுகள் சிறை வாசம் இருந்துள்ளார். இன்னு மொருவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க ப்பட்டிருந்த நிலையில், அவர் 14 ஆண்டுகளை சிறையில் கழித்துள்ளார்.

அவ்வாறே, 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்ட போதிலும் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை இருந்த இரண்டு கைதிகளும் ஜனாதி பதியின் மன்னிப்பைப் பெற்ற வர்களில் அடங்குவர்.

சர்வதேச மனித உரிமை கள் உடன்படிக்கைகளின் அடிப் படையில் இது ஒரு பாரிய மனித உரிமை மீறல் என்றும் அவர்களை இவ்வாறு நீண்ட காலமாக சிறையில் வைத்திரு ந்தமை ஒரு சகிக்க முடியாத அதிகார துஷ்பிரயோகம் என் றும் தேசிய சமாதான பேரவை மேலும் வலியுறுத்துகிறது.


தண்டனை முடிந்து பல ஆண்டுகளாக கைதிகளின் சுதந்திரத்தை மறுப்பது, சட்ட த்தினை அவமதிப்பதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதி ரான அதிகார துஷ்பிரயோக த்தையும் காட்டுகிறது.

இவ்வகையில் பாதிக்கப்பட்ட பெருமளவிலானோர் வழக்குத் தொடரப்படாமல் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளதால் அவர் களை விரைவில் விடுதலை செய்யுமாறு தேசிய சமாதான பேரவை அரசாங்கத்திடம் கோருகிறது.

இந்த நிலையில், குறித்த கைதிகளுக்கு, தமது தண் டனை காலத்துக்கு மேலதிக மாக சிறையிலிருந்த வருடங் களை கணக்கிட்டு அதற்கு அரசாங்கம் உரிய இழப்பீடு வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

அத்தகைய. நடவடிக் கையை அரசாங்கம் எடுக்கத் தயாராக இருந்தால் இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாம் ஆதரவளிக்க தயாரென சமாதான பேரவை தெரிவித் துள்ளது. (நி)

# முட்டை விலை குறைய வாய்ப்பு



(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலையை 7 ரூபாவுக்கும் 10 ரூபாவுக்கும் இடைப்பட்ட அளவில் குறைக்க முடியும் என அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்ணைகளில் முட்டை ஒன்றை 45 ரூபாவுக்கு விற்பனை செய்ய ஆரம் பித்துள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க தெரிவித்துள்ளார்.

சகல பொருட்களின் விலைகளும் சற்று குறைவடைந்து வரும் நிலையில், முட்டையை விலை குறைத்து விற் பனை செய்ய முடியும்.

குறித்த விடயம் தொடர்பில் அரசா ங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர்தெரிவித்துள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் இருந்து இடமாற்றம்
பெற்றுச் சென்ற ஆசிரியை
திருமதி. **கயேந்திரராணி குகதாசன்**
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி. **புகனேஸ்வரி வேலாயுதம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(13328)


# இராசிபலன்

03.11.2022
ஐப்பசி 17, வியாழக்கிழமை
தசமி முன்னிரவு 9.24 மணிவரை
சதயம் பின்னிரவு 3.00 மணிவரை

சுபநேரம்- 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் -1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயிலியம்


வளவன்




**மேஷம்** — வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.




**கடகம்** — கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.




**துலாம்** — கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.




**மகரம்** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




**ரிஷபம்** — சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




**சிம்மம்** — நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




**விருச்சிகம்** — சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




**கும்பம்** — சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க நேரிடலாம்.




**மிதுனம்** — பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.



**கன்னி** — செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மறைமுகப் போட்டிகள் மாறும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**தனுசு** — வியாபார விரோதம் விலகும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.



**மீனம்** — எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

தேவையற்ற பணம் பல பாவங்களைச் செய்ய உன்னைத் தூண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

18





“இன்றைக்கு இங்கே என்ன விசேஷம் என்பதைப் பற்றி அப்புறம் விபரமாக சொல்கிறேன். நீயும் நானும் பெண்ணையாற்றங்கரைப் பாசறையில் தங்கியிருந்த போது 'பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும்; மழவரையரைப் பார்க்க வேண்டும; அவரைப் பார்க்க வேண்டும்; இவரைப் பார்க்க வேண்டும்' என்று சொல்வாயே? அந்த அவர், இவர், சுவர் எல்லோரையும் இன்றைக்கு இங்கேயே நீ பார்த்து விடலாம்!” என்றான் கந்தமாறன்.

பிறகு விருந்தாளிகள் அமர்ந்திருந்த மாளிகை மேல் மாடத்துக்கு வல்லவரையனைக் கந்தமாறன் அழைத்துச் சென்றான். முதலில் தன் தந்தையாகிய சம்புவரையரிடம் கொண்டு போய் நிறுத்தி. “அப்பா! என் தோழன் வாணர்குலத்து வந்தியத் தேவனைப் பற்றி அடிக்கடி தங்களிடம் சொல்லிக் கொண்டிருப்பேனே? அவன் இவன்தான்!” என்றான். வந்தியத்தேவன் பெரியவரைக் கும்பிட்டு வணங்கினான். வரையர் அவ்வளவாக மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றவில்லை.

“அப்படியா! கீழே அரண்மனை வாசலில் அவ்வளவு கலவரம் செய்தவன் இவன்தானா?” என்று கேட்டார். “கலவரத்துக்குக் காரணம் என் தோழன் அல்ல; வாசல் காப்பதற்கு நாம் அமர்த்தியிருக்கும் மூடர்கள்!” என்றான் கந்தமாறவேள்.

“இருந்தாலும் இன்றைய தினம் பார்த்து, அதுவும் இருட்டி அரை ஜாமத்திற்குப் பிறகு இவன் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வந்திருக்க வேண்டியதில்லை!” என்றார் சம்பு வரையர். கந்தமாறவேளின் முகம் சுருங்கிற்று; மேலும் தந்தையுடன் வாதமிட அவன் விரும்பவில்லை, வந்தியத் தேவனை அப்பால் அழைத்துச் சென்றான்.

வந்திருந்த விருந்தாளிகளுக்கு மத்தியில் நடு நாயகமாக ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருந்த பழுவேட்டரையரிடம் அழைத்துப் போய், “மாமா! இவன் என் ஆருயிர் நண்பர் வந்தியத்தேவன், வாணப் பேரரசர் குலத்தவன். இவனும் நானும் வடபெண்ணைக்கரைப் பாசறையில் எல்லைக் காவல் புரிந்து கொண்டிருந்தோம்.

அப்பொழுதெல்லாம் 'வீராதி வீரர் பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும்' என்று ஓயாது சொல்லிக் கொண்டிருப்பான். 'பழுவேட்டரையர் திருமேனியில் அறுபத்து நான்கு போர்க் காயங்கள் இருப்பது உண்மைதானா?' என்று கேட்டுக் கொண்டிருப்பான். 'ஒருநாள் நீயே எண்ணிப் பார்த்துக் கொள்' என்று நான் சொல்லுவேன்” என்றான்.


பழுவேட்டரையர் சுருங்கிய முகத்துடன், “அப்படியா, தம்பி! நீயே எண்ணிப் பார்த்தால் ஒழிய நம்ப மாட்டாயோ? அவ்வளவு அவநம்பிக்கையா உனக்கு? “வாணர் குலத்தைக் காட்டிலும் வேறு குலத்தில் வீரம் இருக்க முடியுமா?” என்ற சந்தேகமோ?” என்றார்.

தோழர்கள் இருவருமே திடுக்கிட்டுப் போனார்கள் தோத்திரமாகச் சொன்னதை இப்படி இவர் குதர்க்கமாக எடுத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கவில்லை. வந்தியத் தேவனுடைய மனத்தில் எரிச்சல் குமுறியது ஆயினும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், “ஐயா! பழுவேட்டரையர் குலத்தின் வீரப் புகழ் குமரி முனையிலிந்து இமயம் வரையில் பரவியிருக்கிறது. அதைப் பற்றிச் சந்தேகிப்பதற்கு நான் யார்?” என்று பணிவுடன் சொன்னான்.

“நல்ல மறுமொழி; கெட்டிக்காரப் பிள்ளை!” என்றார் பழுவேட்டரையர். இந்தமட்டில் பிழைத்தோம் என்று வாலிபர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறினார்கள். அப்போது சம்பு வரையர் தமது மகனை அழைத்துக் காதோடு, “உன் தோழனுக்குச் சீக்கிரம் உணவு அளித்து எங்கே யாவது ஒரு தனி இடத்தில் படுக்கச் சொல்லு! நீண்ட பிரயாணம் செய்து களைத்துப்போயிருக்கிறான்” என்றார். மாறவேள் கோபத்துடன் தலையை அசைத்து விட்டுப் போனான்.

பிறகு மாறவேள் வத்தியத் தேவனை அந்தப்புரத்துக்கு அழைத்து சென்றான். அங்கே பெண்கள் பலர் இருந்தார்கள். மாறவேளின் அன்னைக்கு வந்தியத்தேவன் நமஸ்காரம் செய்தான் அவளுக்குப் பின்னால் கூச்சத்துடன் மறைந்திருக்கும் பெண்தான் கந்தமாறனின் சகோதரியாயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான்.

(தொடரும்.)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

வைரமங்கல சமஸ்தான மந்திரி திடீரென இறந்து விட்டதால் அவரது இடத்தில் வேறொருவரை எப்படி நியமிப்பது என மன்னன் யோசிக்கலானான். அமைச்சராகப் பொறுப்பேற்பவர் நிர்வாகத்திறமை பெற்றவராயும் அரசியல் அனுபவம் பெற்று அயல் நாடுகளுடன் சாதுரியமாக உறவாடி நடவடிக்கைகள் எடுக்கத் தெரிந்தவராயும் இருக்க வேண்டும்.

இந்தத் தகுதிகளோடு மந்திரியாக இருப்பவருக்கு கம்பீரமான தோற்றமும் அழகும் இருக்க வேண்டும் என மன்னன் கருதினான். அதனால் அப்பதவியை அடைய விரும்புவோர் மன்னன் விரும்பியபடி நல்லறிவும் அழகும் பெற்றிருக்க வேண்டும் என பறை சாற்றிவித்தான்.

மந்திரிப் பதவியைப் பல அறிஞர்கள் அடைய விரும்பினாலும் தமக்கு கம்பீரமான தோற்றமும் அழகும் இல்லையே என்று எண்ணி மன்னனைக் காணப்போகவில்லை. அழகாகவும் கம்பீரத்தோற்றமும் கொண்டவர்கள் அப்பதவியை அடைவதற்காக மன்னனை பேட்டி கண்டார்கள்.

ஆனால் அவர்களுக்கு அப்பதவிக்கு வேண்டிய அறிவும் அரசியல் அனுபவமும் இல்லாது போனதால் அவர்களில் யாருக்கும் அப்பதவி கிடைக்கவில்லை.

அந்நாட்டின் தலைநகரில் அனந்தன் என்பவன் வசித்து வந்தான். அவன் சிறந்த அறிஞன். எதையும் சட்டெனப் புரிந்து கொண்டு செயற்படுபவன். எல்லா சாஸ்திரங்களையும் கற்றவன் அரசியல், கலைத் துறைகளிலும் கைதேந்தவன் இப்படியெல்லாம் இருந்த போதிலும் அவனுக்கு அழகு இல்லை.

அவன் மந்திரிப் பதவியை அடைவது என்று தீர்மானித்து மனதில் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு துணிவுடன் மன்னனை பேட்டி காணச் சென்றான்.



### அழகா? அறிவா?

அப்போது வாயில் காப்போன் வேறு யாரோ ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தான். பேச்சு சுவாரசியத்தில் அவன் அனந்தன் மன்னனின் பூங்காவினுள் சென்றதைக் கவனிக்கவில்லை.

அப்போது மன்னன் பூங்காவில் ஒரு சாதாரண மனிதன் போலத்தான் இருந்தான். தலையில் மகுடம் இல்லை. விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிந்திருக்கவில்லை.

பகட்டான உயர்ரக ஆடைகளும் உடுத்தி இருக்கவில்லை.

அனந்தன் அவரை அணுகாமல் சற்றுத் தூரத்திலிருந்த தோட்டக்காரன் பக்கம் போய் நின்று அரசே! என் தாய் தந்தையர் இறந்து விட்டதால் அனாதையாகி விட்டேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 114

மேலும் 1997 முதற்கொண்டு ரஷ்யாவின் எல்லைகள் வரை நேட்டோ செய்யும் விரிவாக்கத்தையும் அவர் அடிக்கடி விமர்சித்தார்.

### மேற்கத்தேய நாடுகளுடன் நட்பின்மை

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான முந்தைய பதற்றங்கள், ஜனாதிபதி பஷர் அல்-அசாத்திற்கு ஆதரவாக சிரியாவின் உள்நாட்டுப் போரில் ரஷ்யாவின் தலையீடு ஆகியன புடின் மீதான மேற்கத்தேய நாடுகளின் சந்தேகத்தை மீண்டும் தட்டியெழுப்பியது. பனிப்போர் கால கட்டத்தில் இருந்ததைப் போல உறவுகளில் சுமூகமின்மை நிலவியது. இதற்கு ஒரு விதிவிலக்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், தான் பதவியில் இருந்த போது, புடினுக்கு வெளிப்படையாக பாராட்டு தெரிவித்ததுதான். மறுபுறம், அடுத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், புடினை ஒரு "கொலையாளி" என்று வர்ணித்தார்.

### வலிமையான தோற்றம்

2000 ஆவது ஆண்டு போர் விமானத்தில் செச்சினியாவிற்கு பறந்தது மற்றும் 2011 இல் கருங்கடலில் ரஷ்ய பைக்கர்ஸ் திருவிழாவில் தோன்றியது போன்ற தேர்தல் ஸ்டண்ட்களை புடின் மிகவும் இரசித்தார். ஆனால் புடின் ரஷ்ய அரசு ஊடகங்களில் தனது மென்மையான பக்கத்தையும் காட்டினார். தனது நாய்களை அரவணைப்பதையும் அழிந்து வரும் அமுர் புலிகளைப் பராமரிக்க உதவுவதையும் அவர் வெளியிட்டார்.

48% ரஷ்யர்கள், 2024 இற்கு அப்பாலும் புடின் ஜனாதிபதியாக இருப்பதை விரும்புகிறார்கள் என்று 2021 பெப்ரவரியில் ரஷ்ய லெவாடா மையம் நடத்திய ஆய்வு சுட்டிக்காட்டியது.

அந்த எண்ணிக்கை பல மேற்கத்தேய அரசியல்வாதிகள் பொறாமைப்படும் அளவுக்கு இருந்தாலும்கூட. மற்றவர்களை ஒப்பிடும்போது புடின் பிரச்சினையற்றவர் என்று பலராலும் பார்க்கப்படுகிறார். 1990 களின் கம்யூனிச வீழ்ச்சிக் குழப்பத்திற்குப் பிறகு ரஷ்யாவை ஒப்பீட்டளவில் நிலையானதாக வைத்திருப்பதற்காக அவர் அரசியல் மதிப்பெண்கள் பெற்றார்.

பரவலான தேசிய பெருமையை மீட்டெடுத்ததைத் தவிர புடின், நடுத்தர வர்க்கத்தை தோன்றவும் செழிக்கவும் அனுமதித்துள்ளார். இருப்பினும் மொஸ்கோ தான் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. அதிக அளவில் கிராமப்புற வறுமை உள்ளது.

### உள்நாட்டில் அமைதியின்மை

வயதான ரஷ்யர்களிடையே அவருக்கு ஆதரவு. இளைஞர்களை ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க வகையில் வலுவாக உள்ளது. இந்த இளைஞர்கள் புடினின் கீழ் வளர்ந்தவர்கள். அவர்களில் பலருக்கு மாற்றத்திற்கான தாகம் இருப்பது போலத் தோன்றுகிறது. பெர்லினில் இருந்து திரும்பிய உடன் கைது செய்யப்பட்ட புடினின் முக்கிய விமர்சகரான அலெக்சே நவால்னிக்கு ஆதரவாக 2021 ஜனவரியில் ஆயிரக்கணக்கான ரஷ்ய இளைஞர்கள் நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புடினின்யுனைட்ரஷ்யக் கட்சியை, "வஞ்சகர்கள் மற்றும் திருடர்களின் கட்சி" என்று முத்திரை குத்தி பரவலான ஊழலை அம்பலப்படுத்தியதன் மூலம் நவால்னி தனக்கென ஒரு பெயரைப் பெற்றார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சமீபகாலத்தில் ரஷ்யா கண்டிராத அளவிற்கு இருந்தன. இதைத் தொடர்ந்து பொலிஸார் தடியடி நடத்தினர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

பழைய சொத்துக்குவிப்பு வழக்கில் சர்ச்சைக்குரிய வகையில் தண்டனை அளிக்கப்பட்டு சிறையில் உள்ள நவால்னி, தற்போது உடல் நலம் குன்றியுள்ளார். மேற்கத்தேய நாடுகளுடனான புடினின் உறவுகள் முறிந்து போனதற்கு மற்றொரு முக்கிய காரணம் இது.

2021 ஒகஸ்டில், "நோவிச்சோக் நரம்பு இரசாயன தாக்குதலில்" இருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். புடினின் மத்திய பாதுகாப்புச் சேவையின் கைவரிசை இது என்று பின்னர் மேற்கத்தேய அரசுகள் குற்றம் சாட்டின.

2018 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ரஷ்ய முன்னாள் உளவாளி செர்ஜி ஸ்கிரிபால் மற்றும் அவரது மகள் யூலியா ஆகியோருக்கு விஷம் கொடுக்க நோவிச்சோக் (நரம்புகளை தாக்கும் ரஷ்ய இரசாயன நச்சு) பயன்படுத்தப்பட்டது. முக்கிய அரசியல் எதிரிகள் மீதான தாக்குதல்களுக்கும் தனக் கும் எந்த தொடர்பும் இல்லை என்று புடின் கூறினார்.

(தொடரும்)

# ஹலோவீன் கொண்டாட்டத்தில் துப்பாக்கிச்சூடு 14 பேர் காயம்; சிகாகோவில் சம்பவம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஹலோவீன் கொண்டாட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 3 சிறார்களும் அடங்கியுள்ளனர் எனவும் அவர்கள் மூவரும் 3, 11 மற்றும் 13 வயதானவர்கள்எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரில் வந்த இரு நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒரு சில விநாடிகளில் இச்சம்பவம் நடந்து முடிந்துவிட்டது என சிகாகோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என சிகாகோ பொலிஸ் அத்தியட்சகர் டேவிட் பிறவுண் தெரிவித்துள்ளார்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(நி)

# தென்கொரிய கடற்பரப்பில் வீழ்ந்த வடகொரியாவின் ஏவுகணை

## தென்கொரிய ஜனாதிபதி கண்டனம்



(பியாங்யாங்)

வடகொரியா நேற்று பத்துக்கும் அதிகமான ஏவுகணைகளை ஏவியதாகவும் அவற்றில் ஒன்று தென்கொரியாவின் கடற்பரப்பில் வீழ்ந்ததாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது.

இது ஒரு படையெடுப்பு போன்றதாகும் என தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் விமர்சித்துள்ளார்.

கொரியா1953 ஆம்ஆண்டு இரு நாடுகளாக பிரிக்கப்பட்ட பின்னர், இவ்வாறு கடல் எல்லைப் பகுதியை ஏவுகணையொன்று கடந்து சென்றமை இதுவே முதல் தடவையாகும் என தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை காரணமாக தென்கொரியாவின் உலேயுனங்கோடா தீவின் வான் பாதுகாப்பு அபாய எச்சரிக்கை அலாரம்கள் ஒலித்தன.

வடகொரியாவின் இந்த ஏவுகணை தொடர்பில் தென்கொரியா கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வட கொரியாவின் ஏவுகணைகள் ஏவப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்கும் கடல் எல்லைப் பகுதிக்கு அருகில் வானிலிருந்து 3 ஏவுகணைகளை தான் ஏவியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

தென் கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து நடத்தும் இராணுவப் பயிற்சிகளை நிறுத்தாவிட்டால் "வலிமையான நடவடிக்கைகள்" மேற்கொள்ளப்படும் என வடகொரியா நேற்று முன்தினம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பஹ்ரெய்னுக்கு முதல் தடவையாக விஜயம் செய்கிறார் பாப்பரசர்



(பஹ்ரெய்ன்)

பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் பஹ்ரெய்னுக்கு விஜயம் செய்யவுள்ளார். மத்திய கிழக்கு நாடான பஹ்ரெய்னுக்கு பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்யவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அவர் பஹ்ரெய்னில் தங்கியிருப்பார் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

இஸ்லாத்துடனான உறவுகளை இவ்விஜயம் உறுதிப்படுத்தும் என நம்பப்படுவதாக ஏ.எவ்.பி தெரிவித்துள்ளது.

அங்கு மரணதண்டனை இரத்துச் செய்வதற்கும் சித்திரவதை குற்றச்சாட்டுகள் மற்றும் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கான உரிமை மீறல்கள் குறித்து தீவிரமாக விசாரிக்க வேண்டும் என பாப்பரசர் வலியுறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சரணாலயம் அமைக்க

## பொருத்தமான காணியை அடையாளம் காணுங்கள்

### ஜனாதிபதி பணிப்பு

**(கொழும்பு) வடக்கு மாகாணத்தில் 1000 ஏக்கர் அளவில் சரணாலயத்தை அமைப்பதற்கு பொருத்தமான நிலத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**



வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், சரணாலயங்கள் மற்றும் மிருகக்காட்சிச்சாலைகளை பார்வையிட தெற்கிற்கு வர வேண்டிய சூழல் காணப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் பொருத்தமான காணிகளை ஆராயுமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார். (நி)

# மசகு எண்ணெய் கப்பலுக்கு 67 கோடி ரூபாய் தாமதக் கட்டணம்

(கொழும்பு)

நாட்டை வந்தடைந்துள்ள மசகு எண்ணெய் கப்பலொன்று கடந்த 40 நாட்களாக கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பலுக்கான தாமதக் கட்டணமாக 67 கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இக்கப்பலிலிருந்து மசகு எண்ணெய் தரையிறக்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதை அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சு.க தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை ஒருபுறம் வைத்து விட்டு மக்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

நாட்டை வந்தடைந்த மசகு எண்ணெய்க் கப்பலொன்று கடந்த 40 நாட்களாக கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது. குறித்த கப்பலுக்கான தாமதக் கட்டணமாக 67 கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இந்தக் கட்டணம் அப்பாவி பொதுமக்களிடமிருந்து வரிப் பணத்திலேயே கட்டப்படவுள்ளது.

குறித்த கப்பலில் சுமார் 100,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் காணப்படுகிறது.

குறித்த நிலக்கரியை தரையிறக்கியிருந்தால் சுத்திகரிப்புப் பணிகளை தடையின்றி முன் னெடுத்திருக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

அரசாங்கம் கொண்டு வர வுள்ள நிதிக் கொள்கையின் ஊடாக பொருட்களின் விலைகளை படிப்படியாகக் குறைக்க எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் இராஜேஸ்வரி அறக்கட்டளையினூடாக மலர்ந்த இராஜேஸ்வரி அன்புச்சோலை எனும் 18 வீடுகளை மனமுவர்ந்து நன்கொடையாக வழங்கிய இராஜேஸ்வரி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. செல்லத்துரை திருமாறன் கொங்கா தம்பதியினரின் தன்னிகரில்லா சேவையினை மதிப்பளித்து

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி-5201)

அன்புடன் வாழ்த்துவோர்:

இராஜேஸ்வரி அன்புச்சோலை 18 வீட்டுத்திட்ட பயனாளிகள்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 40 சூரி 10 செவ் 2 இல்<br>உயரம்: 171 cm<br>தகைமை/தொழில்: AAT Accounts Executive (தனியார்)<br>எதிர்பார்ப்பு: வேலை செய்பவர்<br>தொ.இ: B/13097 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3<br>கி.பா: 30 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.com ,MBA வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன்<br>தொ.இ:G/10960 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: சூரி 7செவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L மின்னியலாளர்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/13098 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரி. செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.Tech. Engineer தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி தகுந்த வரன்<br>தொ.இ:G/10969 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 77 சூரி 4 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டு பெண்,விவாகரத்தானவர்<br>தொ.இ: B/13100 | பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 44 ½ சூரி 1 செவ் 11 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/10970 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 24 சூரி, செவ் 11 இல்<br>உயரம்:172 cm<br>தகைமை/தொழில்:BBA (அரச வங்கி உதவி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10220 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் R.C<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BA அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10971 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்றும் நினைவில் கொள்.
மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது.
- கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தற்கொலை மரணங்கள் மலிந்த தேசமாக...

உலகம் எங்கோ சென்றுவிட்டது. தகவல் தொடர்பாடல்களின் உச்சமான வளர்ச்சியூடாக அதீத வருமானம் ஈட்டுவதில் இளைஞர் சமூகம் அதிதீவிரம் காட்டி நிற்கிறது.

உண்மை. வெளிநாடுகளில் இருக்கக்கூடிய இளம் சமூகம் தகவல் தொழில்நுட்பத்தினூடு பொருளாதார பலத்தை உச்சப்படுத்தி நிற்கிறது.

இங்கு வெளிநாட்டு இளைஞர்கள் என்ற சொற்பதம் எங்கள் புலம்பெயர் தமிழ் உறவுகளையும் உள்ளடக்கியதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் எங்கள் தாயகத்தில் இருக்கக்கூடிய இளம் சமூகத்தின் போக்கை நினைக்கும்போது, மனம் நொந்து போகிறது.

ஆம், உலகத்தில் உச்ச வருமானத்தை ஈட்டிக் கொடுத்து நிற்கக்கூடிய தகவல் தொழில்நுட்பம் எங்கள் தமிழ் இளைஞர்களைக் கந்தறுத்து நிற்பதுதான் வேதனையிலும் வேதனை.

எங்கள் இளம் சமூகத்தை தகவல் தொழில்நுட்பம் பாழாக்கிவிட்டது.

எது எதற்கெல்லாம் நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று அறிவார்ந்த சமூகம் கருதியதோ அவற்றையெல்லாம் எங்கள் இளம் சமூகம் பின்பற்றி நிற்பதுதான் மிகப்பெரும் கொடுமை.

இதன் விளைவாக கூடாநட்பும் புரிதல் இல்லாக் காதலும் போதைப் பாவனையும் அதிகரித்துவிட, குடும்பக் கட்டமைப்பில் இருந்து விலக்குப் பெறுகின்ற இளம் சமூகம் தாய், தந்தை, சகோதரர்கள், இரத்த உறவுகள் என்ற அத்தனை பந்த பாசங்களையும் இழந்து தனிமையிலும் சோகத்திலும் போதையிலும் காலத்தைச் செலவிட்டு ஈற்றில் தற்கொலை செய்து கொள்ளுகின்ற விபரீதம் நடந்தாகிறது.

பெற்ற தாய், தந்தையரை மறந்து காதல் வலையில் அகப்பட்டு அதன் சாதக, பாதக நிலைமைகளை அறியாமலே உயிரை மாய்த்துக் கொள்கின்ற பெரும் கொடுமை சர்வ சாதாரணமாயிற்று.

அதிலும் தற்கொலை செய்வதை வீடியோ செய்கின்ற அளவில் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது.

ஆம், ஒருபுறம் போதைவஸ்து பாவனை மறுபுறம் தற்கொலை என்றவாறு எங்கள் தமிழ்ச் சமூகம் துன்பக் கடலில் வீழ்ந்து தவிப்பது கண்டு இதயம் கருகிப் போகிறது.

ஆக, தற்கொலையினின்றும் எங்கள் இளம் சமூகத்தைக் காப்பாற்ற தன்னம்பிக்கை, ஆளுமை, உயர்கல்வி, வேலைவாய்ப்பு என்றவாறான தளங்களில் எங்கள் பிள்ளைகளை வழிப்படுத்துவது இன்றைய காலத்தின் அவசர தேவையாகும்.

## வெளிநாட்டவர்கள் திருமண பதிவு செய்வதில் உள்ள தடைகளை நீக்குக

### பதிவாளர் நாயகத்துக்கு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களை பதிவு செய்வதில் உள்ள தடைகளை நீக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன பதிவாளர்நாயகத்துக்கு நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயத்துக்கு இடையூறாக காணப்படும் முன்னைய சுற்றறிக்கையை உடனடியாக இரத்துச் செய்யவும் பிரதமர் அறிவுறுத்தியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் இதுபோன்ற பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கினார். (ம-7)

## நீதிமன்ற வளாகத்திலிருந்து கைதி தப்பியோட்டம்

### முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்திற்குள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட திருட்டு குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நீதிமன்ற வளாகத்திற்குள் இருந்து தப்பி ஓடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு 6 ஆம் வட்டாரம் சிவநகர் பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து பெறுமதியான நகைகள் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேகத்தின் அடிப்படையில் சிவநகர் பகுதியை சேர்ந்த 28 வயதான குறித்த குடும்பஸ்த்தர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந் நிலையில் குறித்தநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்த நிலையில் தப்பியோடியுள்ளார். (ம-7)

## சிகை அலங்கார நிலையங்கள் மூலம் பரவும் எச்.ஐ.வி தொற்று

(கொழும்பு)

சிகை அலங்கார (சலூன்) நிலையங்களில் முடியைக் கத்தரிக்கும் போது எச்ஐவி தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தோல் நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜானக அகரவிட்ட தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

சிகை அலங்கார (சலூன்) நிலையங்களில் முடி வெட்டும்போது அதற்குப் பயன்படுத்தப்படும் பிளேட் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அதாவது ஒருவருக்குப் பயன்படுத்தப்பட்ட பிளேட்டை மற்றொருவருக்குப் பயன்படுத்தக் கூடாது. இதேபோன்றே பச்சை குத்தும்போது பயன்படுத்தப்படும் ஊசிகளும் அவ்வாறே ஆளுக்கு ஆள் மாற்றப்பட வேண்டும்.

எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் டீ போன்ற நோய்கள் இத்தகைய வழிகளில் பரவுகின்றன. எனவே, இதுபோன்ற சேவைகளை சரியான தரத்துடன் கூடிய இடங்களில் பெற்றுக் கொள்வது முக்கியம் என்றார். (ம-7)

## கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்காவின் கப்பல்

அமெரிக்காவினால் இந்நாட்டிற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட P 627 எனும் ஆழ்கடல் சமுத்திர கண்காணிப்புக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

அமெரிக்க கடற்படை பாதுகாப்பு திணைக்களத்தினால் இலங்கைக்கு இந்த கப்பல் அன்பளிப்பு செய்யப்பட்டதாக கடற்டை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார். (ம-7)

## நச்சுப் புகையை சுவாசித்ததால் 40 மாணவர்கள் மருத்துவமனையில்

(கொழும்பு)

பாணந்துறையில் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நச்சுப் புகையை சுவாசித்ததால் திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பாணந்துறை நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களே பாணந்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீடு அல்லது பாடசாலையைச் சுற்றியுள்ள இடங்களில் சில எரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் ஏற்பட்ட புகை மூட்டத்தினால் இம் மாணவர்கள் சுவாசிப்பதில் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவர்களை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கோம்பயன் மணல், நாவாந்துறை நாவலர் வீதி, பொம்மைவெளி சி.எஸ்.என்.- நாயன்மார்கட்டு, டீசல் மற்றும் மோட்டார் பொறியியல் [illegible] அரியாலை, [illegible] கல்லூரி, [illegible] சிறுவர் கிராமம், செட்டித்தெரு, நல்லூர், கனகரட்ணம், மாம்பழம் சந்தி, முள்ளி, அரியாலை, நாவலடி, நாவலர் வீதி கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார் வீதி, நாயன்மார்க்கட்டு செம்மணி வீதி, பேரம்பலம் வீதி, கண்டி வீதி, பூம்புகார், புங்கங்குளம், திருமகள் வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மறக்கறம்பளை-கணேசபுரம், சமயபுரம் ஆகிய பிரதே[illegible]சங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நேருக்கு நேர் மோதிய பயணிகள் பேருந்து

### 10 பேர் காயம்

(கொழும்பு)

அதிவேகமாகச் சென்ற இரண்டு தனியார் பேருந்துகள் மோதிக் கொண்டதில் இரு பேருந்துகளிலும் பயணித்த 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஹற்றன்-கண்டி பிரதான வீதியில் நாவலப்பிட்டி மிப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. (நி)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"

*- தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா உணவு, விவசாய நிறுவனத்தின் உரம் வழங்கும் திட்டத்தில் கிளிநொச்சி விவசாயிகள் புறக்கணிப்பு

## அரச அதிபருக்கு சிறீதரன் எம்.பி கடிதம்

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தினால் (FAO) வடக்கு மாகாணத்தில் ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு அந்தர் அசேதனப் பசளையும் முப்பதாயிரம் ரூபாய் நிதியுதவியும் 2.5 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒரு அந்தர் அசேதனப் பசளையும் வழங்கும் உதவித் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கடந்த 31 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் FAO நிறுவனத்தினால் கோரப்பட்டதற்கு அமைவாக வறிய விவசாயிகள் எவருமில்லை என்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அதிக நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடுவதோடு மிகை அறுவடையைப் பெறுபவர்களாக உள்ளதாகவும் 2022.02.28 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தவறான உற்பத்தித் தரவுகளே எமது மாவட்ட விவசாயிகளுக்கான உதவித் திட்டம் நிராகரிக்கப்படக் காரணம் எனப் பாதிக்கப்பட்ட விவசாய அமைப்புக்கள் என்னிடம் சுட்டிக் காட்டியுள்ளன.

கடந்த 2022.10.20 ஆம் திகதிய பத்திரிகைச் செய்திகளில் கிளிநொச்சிமாவட்டத்தைச் சேர்ந்த 9,971 குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தரவுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் அண்ணளவாக நான்கில் ஒரு பகுதியினர் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ள சமநேரத்தில் 'இந்த மாவட்டத்தில் வறிய விவசாயிகள் எவரும் இல்லை எனப் பொறுப்பற்ற சமர்ப்பிக்கப்பட்ட பொய்யான தரவுகளால் ஏற்கனவே எரிபொருளின்மை, உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள எமது மாவட்டத்தின் விவசாயிகள் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே இந்த மாவட்டத்தின் முதுகெலும்புகளாக உள்ள எமது விவசாயிகள் மேலும் பாதிக்கப்படாத வகையில் முறையான தரவுகளை மீள சமர்ப்பிப்பதன் மூலம் மேற்படி உதவியைப் பெற தகுதியிருந்தும் நிராகரிக்கப்பட்டுள்ள 7,760 விவசாயிகளுக்கும் இவ் உதவித் திட்டத்தைப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# கலாபூசணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(நெளுக்குளம்)

2022 ஆம் ஆண்டுக்கான கலாபூசணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பப்படிவங்களை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நாளை 4 ஆம் திகதிக்கு முன் கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்தார். (4-299)

# வவுனியா மாவட்டத்தில் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு

(குருமன்காடு)

லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலையில் மாற்றம் ஏற்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தில் மீண்டும் லிட்ரோ எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மாவட்டத்தின் பெரும்பாலான எரிவாயு விற்பனை நிலையங்களில் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் மக்கள் அதனை பெற முடியாது திரும்பிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தரை தொடர்பு கொண்டு வினவிய போது, எதிர்காலத்தில் லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்குமா அல்லது குறையுமா என்பதை உறுதியாகக் கூற முடியாது.

இதன் காரணமாக விற்பனை நிலையத்தினர் குறைந்தளவில் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்கின்றமையினால் இத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தார்.(4-250)



யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன், கஜிந்தன்)

# வீதியை செப்பனிடுமாறு கோரி மக்கள் வீதியை மறித்து போராட்டம்

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி எழுத்தூர் சந்தியில் இருந்து தரவன் கோட்டை கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியை உரிய முறையில் செப்பனிட்டு தருமாறு கோரி குறித்த கிராம மக்கள் நேற்று புதன்கிழமை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த நிலையில் மன்னார் உதவி பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வந்து மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மக்களின் பிரச்சினையை கேட்டறிந்த மன்னார் உதவி பிரதேச செயலாளர் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் நாளை வெள்ளிக்கிழமை குறித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து தீர்மானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக தெரிவித்தார். இந்த நிலையில் மக்கள் அங்கிருந்து சென்றனர். (4-285)

# அரசியல் தீர்வு கோரி அளவெட்டியில் கவனயீர்ப்பு




(சாவகச்சேரி)

இலங்கையின் வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வினைக் கோரி யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் நேற்று புதன்கிழமை வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெண்கள், இளையோர் அமைப்புக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (4-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 200 |
| தக்காளி | 400 | 320 | 320 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 120 | 200 |
| கோவா | 350 | 250 | 320 | 400 |
| கரட் | 300 | 390 | 450 | 420 |
| பூசணி | 180 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 150 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 550 | 550 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 450 | 700 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 350 | 250 | 250 | 300 |
| கறிமிளகாய் | 450 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 160 | 120 |
| தேசிக்காய் | 500 | 500 | 650 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 500 | 400 | 350 | -- |
| முள்ளங்கி | 120 | 180 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 120 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண் விலை...

விக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கெனவே ஏற்பட்ட விலை மாற்றத்தின் போது எமது சங்கங்களை அழைத்து யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களும் மாவட்ட செயலர் கௌரவ க. மகேசன் அவர்களும் பாண் விலையை அதிகரிக்க வேண்டாம் எனக் கேட்டதுக்கிணங்க எமது லாபத்தினை மட்டும் எதிர்பாராது அவர்களது கோரிக்கையை ஏற்று நாம் பாண் விலையை கட்டுப்படுத்தி ரூபாய் இருநூறு (200/=) விற்க சம்மதித்தோம்.

அப்போது நாட்டின் இதர பகுதிகளில் அதிகரித்த விலையிலேயே (உதாரணம் ரூபாய் 220/= தொடக்கம் ரூபாய் 250/= வரை) விற்பனை செய்து வந்தனர்.

எமது விலையானது கோதுமை மா விநியோக நிறுவனங்களான பிரீமா மற்றும் செரண்டிப் ஆகியவற்றின் மாவின் விலைகள் குறைந்தவுடன் பாணின் விலை குறைவடையும் என யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரி உரிமையாளர் மற்றும் வெதுப்பக உற்பத்தியாளர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/11/02
சீட்டிழுப்பு இலக்கம் 4927
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 6 6 5 0 1 6
தேசிய லொத்தர் சபை



HANDAHANA
அதிர்ஷ்ட உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.02
சீட்டிழுப்பு இலக்கம் 236
வெற்றி இலக்கங்கள்
மீனம் 04 25 27 58 மீனம்
தேசிய லொத்தர் சபை



மெகா பவர்
திகதி 02/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1275
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
K 01 32 44 51 62



கொவிசெத
திகதி 2022.11.02
சீட்டிழுப்பு இலக்கம் 3169
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 02 20 39 47
தேசிய லொத்தர் சபை



தன நிதானய
திகதி - 2022.11.02
சீட்டிழுப்பு இலக்கம் - 957
X 06 30 65 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1382
வெற்றி இலக்கங்கள்
கன்னி 1 1 2 3 8 4
தேசிய லொத்தர் சபை


## ஆர்ப்பாட்டக்காரர்...

அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் உரிமைகளை அமைதியாக பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுகொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அமைதியாக...

பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச்செய்யுமாறு வலியுறுத்தியும் தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதற்கு பொலிஸார் அனுமதி வழங்க மறுத்திருந்த நிலையில், அதனைக் கண்டித்து தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## கிணற்றிலிருந்து...

நேற்று அதிகாலை 2 மணியளவில் காணாமல் போனவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணையை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மேற்கொண்டார். (ம-7,60)

## கொழும்பில்...

அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் மதியம் முதல் போராட்டம் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

"பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு" போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியவாறும் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், கலகத் தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார், படையினர் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் போராட்டப் பேரணி கோட்டை புகையிரத நிலையம் வரை செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட படையினர் வீதி முழுவதும் குவிக்கப்பட்டனர். பல மணி நேரமாக பொலிஸாரின் தடுப்பை மீறி போராட்டக்காரர்கள் செல்வதற்கு முயற்சித்தும் அது பயனற்றுப்போனது. பொலிஸார் பொறுமையையும் கடைப்பிடித்து, வன்முறைகளையும் பிரயோகிக்காமையால் குறித்த இடத்தை விட்டுப் போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ம-7)

## வடக்கு காணி...

வலி. வடக்கு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு நேற்றுப் புதன்கிழமை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு தீர்வுகாணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.

பருவமழைக் காலம் நிறைவடைந்ததும் நேரடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து திரக்கமான சாதக

மான முடிவுகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளார்.

எனவே, கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புகள் விட்ட தவறுகள் என்னவென்றால் கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதே.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

தற்போது கிடைக்கும் சாதகமான வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இனியாவது இருப்பதைபாதுகாத்துக்கொண்டு அதனை முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

பிரச்சினைகள் தீர்வை நோக்கி போகவேண்டுமேயொழிய அதனை குழப்பிக்கொண்டு போகும் நோக்கம் எனக்கில்லை" என அமைச்சர் தெரிவித்தார். (ம-7,104)

## பேர...

பெரும் பொலிஸ் பட்டாளம் குவிக்கப்பட்டிருந்தது.

இந்த அரணை உடைக்க போராட்டக்காரர்கள் முயன்றனர். ஆனால் முடியவில்லை.

போராட்டக்களத்திலிருந்த சஜித் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களை முன்வரிசைக்கு சென்று, அரணை உடைத்துச் செல்லுமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அங்கு வன்முறையை தவிர்ப்பதற்காக எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள்தமது வாகனங்களில் ஏறி போராட்ட இடத்தை விட்டு வெளியேறினர்.

எவ் வாறாயினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர், பொலிஸ் மனித தடுப்பை தாண்டி செல்ல முடியாவிட்டால், சஜித் ஏன் சம்பவ இடத்திற்கு வந்தார் என்று கேள்வியெழுப்பினர்.

சஜித்தும், ஏனையவர்களும் வெளியேறிய போது சிலர் கூச்சலிட்டனர்.

பின்னர் போராட்டம் அமைதியான முறையில் முடிவுக்கு வந்தது. (ம-7)


அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1728
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.11.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,650,800/-
வெற்றி இலக்கங்கள் 47 49 53 69 ஆங்கில எழுத்து D
அபிவிருத்தி லொத்தர் சபை



சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.11.02
சீட்டிழுப்பு இல: 4063
வர்ணம்: ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,300,600/-
வெற்றி இலக்கங்கள் 15 22 41 48 ஆங்கில எழுத்து K
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,985,828.60
திகதி 2022-11-02
வெற்றி வாரம் 3614
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 16 33 34 50 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,144,560/-



லக்கி 27 கப்பல்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 27 13 18 50 56
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1078
வர்ணம் பச்சை
திகதி 2022.11.02 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 274,195,097.80
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1867
சீட்டிழுப்பு திகதி 2022-11-02
வெற்றி இலக்கங்கள் 25 39 41 62 ஆங்கில எழுத்து J
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 36,781,044/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1902
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.02
தினம் புதன்கிழமை
Z 03 25 32 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,591,540/-



நாகபூசணி அம்மன் அருளுடன்

01.11.2022 செவ்வாய்க்கிழமை சீட்டிழுக்கப்பட்ட **மகஜன சம்பத** ரிக்கெற் ஊடாக **20 இலட்சம் ரூபாயும் சசிரி** ரிக்கெற் ஊடாக **1 இலட்சம் ரூபாயும்** எமது முகவரூடாக வெல்லப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் அதிஷ்டத்தின் முன்னணி முகவராக உங்களுக்காக என்றும் நாம் பணியாற்றுவதில் மகிழ்ச்சியே

(13333)



077 603 1723


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் எதுவுமில்லை

## இரான் விக்ரமரத்ன



(கொழும்பு)

அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை என்பதால் அடுத்த வருடமும் பணத்தை அச்சிட வேண்டிய நிலையே ஏற்படுமென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் நூற்றுக்கு 200 - 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், வரிகள் ஊடாக நாட்டுக்குக் கிடைக்கும் வருமானம் 11 சதவீதமாக அதிகரிக்கும் என அரசாங்கம் கூறுகிறது. இது பகல் கனவாகும். இதனை செய்யவே முடியாது எனவும் தெரிவித்தார். (ம-7)

# கொழும்பைச் சுற்றிக் காட்டுவதற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆட்டோ வாடகை

## சாரதி கைதாகி விளக்கமறியல்

(கொழும்பு)

நியூசிலாந்து சுற்றுலா பயணியிடம் கொழும்பு நகரை சுற்றிக்காட்ட ஒன்றரை லட்சம் ரூபாய்வாடகைவாங்கிய ஆட்டோ சாரதியான சுற்றுலா வழிகாட்டியை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நியூசிலாந்து நாட்டவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நியூசிலாந்துக்காரர் கொழும்பு நகருக்குச் செல்வதற்காக சுற்றுலா வழிகாட்டியுடன் முச்சக்கர வண்டிக் கட்டணத்தை வினவ, அதன் சாரதி கொழும்பு நகரைச் சுற்றிவர 20 டொலர் தேவைப்படுவதாகக் கூறியுள்ளார்.

ஒரு டொலர் 4,500 ரூபா என்றும், அந்தத் தொகையை ரூபாயாகத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட தற்கிணங்க, அந்தத் தொகையை நியூசிலாந்துக்காரர் வங்கி அட்டை மூலம் பெற்று அவரிடம் கொடுத்தார்.

இதனடிப்படையில் சந்தேக நபரான முச்சக்கரவண்டிச் சாரதி கைது செய்யப்பட்டார். (ம-7)

# வன்முறை மூலம் ஆட்சியை எவராலும் உறுதிப்படுத்த முடியாது

## நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வன்முறை மூலம் ஆட்சியை எவராலும் உறுதிப்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர், கட்சி எப்போதும் ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றுவதாகவும், ஒரு கட்சியாக தீர்மானங்களை எடுக்கும்போது இலங்கை மக்களின் நலனை எப்போதும் கருத்தில் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கொள்கைகள் காரணமாகவே SLPP பெரும்பான்மையான பிரதேச சபைகளில் அதிகாரத்தைப் பெறமுடிந்தது என்றும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையைப் பெறமுடிந்தது என்றும் அவர் கூறினார்.

"நாம் எப்பொழுதும் ஜனநாயகத்தை பின்பற்றும் கட்சியாக, நமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப நமது கட்சியை நவீனமயமாக்க வேண்டும். தற்போது கட்சியாக அந்த கட்டத்தை கடந்து வருகிறோம். நாங்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். தேர்தலின் மூலம் அரசாங்கத்தை மாற்ற வேண்டும், அதுவே ஜனநாயக வழி. நாட்டில் அதிகாரத்தைப் பெறுவதற்கு வன்முறை ஒரு வழி என்று நாங்கள் நம்பவில்லை" என்றார். (ம-7)

## அரசாங்...

விக்கையில்,

அரச அடக்குமுறைக்கான இந்த எதிர்ப்புப் பேரணியானது கொழும்பு கோட்டை ரயில் நிலைய பகுதிவரை செல்வதற்கு இருந்தது. எனினும் சட்டத்துக்கு மதிப்பளித்து கொழும்பு வர்த்தக மையப்பகுதியிலேயே எமது இந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொள்கின்றோம்.

ஜனநாயகத்தை வெற்றி கொள்வதற்கான இந்த பயணத்தில், தேர்தலை நடத்த செய்வதற்கான பயணத்தில், அரசாங்கத்தை மாற்றும் பயணத்தில் முதலாவது சிறிய நடவடிக்கையாக நேற்றைய இந்தப் பேரணி அமைந்துள்ளது.

இந்தப் பேரணியில் பங்கேற்க வேண்டாம், பேரணிக்காக வீதியில் நடந்து திரிய வேண்டாம் என்று எமக்கு கடிதம் அனுப்பினர்.

இளைஞர் சமூகத்தின் விடுதலைக்காக நாம் தொடர்ச்சியாகப் போராடுவோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தி எமது ஜனநாயக உரிமையை, வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் ஆகியோரின் உரிமைகளை இன்று பறித்துள்ளனர்.

தற்போது மிலேச்சத்தனமான அரசாங்கம் ஒன்றே ஆட்சியில் உள்ளது. திரிசங்கு நிலையில் உள்ள அரசாங்கமாகும்.

அரச பயங்கரவாதத்தை அரங்கேற்றும் அரசாங்கம் ஒன்றே ஆட்சியில் இருக்கின்றது. எனினும் இவற்றுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. நாம் எந்த நேரத்திலும் எதற்கும் முகங்கொடுக்க தயாராகவுள்ளோம்.

எனவே எமது அகிம்சை ரீதியான, ஜனநாயக ரீதியிலான இந்த போராட்டம் வெற்றி பெறும். இந்த பேரணியை நாம் மிகவும் அமைதியான முறையிலேயே முன்னெடுக்கின்றோம். நாட்டின்பாதுகாப்புதுறையுடன்மோதுவதற்கு நாம் தயாரில்லை.

எனினும் மக்கள் பிரதிநிதித்துவத்துக்கான கடமைகளை ஆற்றாது நாட்டை சீரழிக்கும் வரிச் சுமையை திணிக்கும் மக்களின் வறுமை நிலையை அதிகரிக்கும் அரசாங்கத்துடனேயே எமது போராட்டம் உள்ளது. (ம-7)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 04.10.2022
செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)
(மோகன் சவுண்ஸ் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.26, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.
இங்ஙனம்:- குடும்பத்தினர்
(13309) 077 077 6234



உ
ஓம் சக்திமயம்

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தற்கால சூழல் என்ற கருப்பொருள் தொடர்பான ஓர் கலந்துரையாடல் நடாத்த வேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள், மஹோற்சவ உபயகாரர்கள், அலங்கார உற்சவ உபயகாரர்கள், ஏனைய விழா உபயகாரர்கள், சமூகப் பெரியார்கள், அம்பாளின் அடியார்கள், சமய, ஆன்மீக வல்லுனர்கள் போன்றோரை எதிர்வரும் 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்து தங்களின் ஆக்கபூர்வமானதும் மேலானதுமான கருத்துக்களை வழங்குமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தெளிவே என் சிந்தனை

இங்ஙனம்
இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவும்
மேற்படி தேவஸ்தானம்.

(C-5203)



அமெரிக்க லொத்தர் இலவச விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
Passport அவசியமில்லை
55'000 விசாக்கள்
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இன்னும் நான்கு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்
எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5189)
V2 Travels 0768226240 0768226244



# கண்ணீர் அஞ்சலி



அமரர் செல்வராஜா ரமேஷ்
(உள்ளூராட்சி உதவியாளர் - பிரதேச சபை, காரைநகர்)

மண்ணில் 05.05.1969
விண்ணில் 01.11.2022

அன்பெனும் விழுதினை ஆலமரம் போல் பரப்பி
பண்பெனும் பாடத்தை பகலவன் போல் ஒளிபரப்பி
தித்திக்கும் இனிய இல்லறத்தை நல்லறமாக்கி
வாழ்க்கைப் புத்தகத்தின் இறுதியத்தியாயத்தையும்
இன்பமாகக் கடந்து உள்ளத்தில் கள்ளமில்லாத
உத்தமனாய் உறவுகளை அரவணைத்து
காலத்தை வென்று நின்ற குலவிளக்கை
இழந்து தவிக்கும் உறவுகளின் துயரத்தை
ஆற்ற வழியின்றி நாமும் கலங்குகின்றோம்.

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
காரைநகர் பிரதேச சபை.
(C-5204)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.